**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 152/2019 |
| Name | : Vasanthamani |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025

**எதிரிகள் 1, 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கடத்துாரில் தம்பு நாயக்கர் சாளையில் வசித்து வருகிறேன். மாடு வைத்துள்ளேன். அ.சா.1 எனது மகன் ஆவார் அவர் கறைவை மாடு வைத்துள்ளார். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான், என் மகள் அமுதவள்ளி மகன் மாரிமுத்து ஆகியோர்கள் தோட்டத்தில் இருந்த போது சுமார் 12.00 மணி அளவில் இரண்டு நபர்கள் ஆலடியான் மற்றும் அவரது மனைவி எங்கள் வீட்டிற்கு வந்து மாடு வாங்கியதற்கு காசு கேட்டார் அதற்கு எனது மகன் நான் ஏற்கனவே ரூ.56 ஆயிரம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். ஆலடியான் இன்னும் ரூ.4 ஆயிரம் கொடுக்க வேண்டியது உள்ளது என்று சொன்னார். எனது மகன் கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னார். எனது மாட்டை கொண்டு வந்து கட்டிவிட்டு இப்படி பண்ணுகிறாயா என்று எதிரி கெட்ட வார்த்தையால் திட்டினார். எனது மகள் காசு கொடுத்ததாக சொல்கிறார் ஏன் கெட்ட வார்த்தையால் திட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு என் மகளை குழந்தையுடன் தள்ளிவிட்டார்கள். பேசிக்கொண்டே பஞ்சவர்ணம் பின்னால் சென்ற போது இடறி விழுந்தார் உடனே எனது மகன் தான் தள்ளிவிட்டார் என்று ஆலடியான் டையர்

வண்டியில் பின்னால் கட்ட பயன்படும் மூக்கானி கட்டையை எடுத்து என் மகனின் தலையில் அடித்தார் உடனே அவருக்கு மூக்கில் ரத்தம் வந்தது. அவருக்கு மயக்கம் வந்தது. கட்டையை எறிந்துவிட்டு எதிரிகள் காரில் சென்றுவிட்டார்கள். நாங்கள் எனது மகனை உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். என் மகன் கோவை அரசு மருத்துவமனையில் சுமார் 1 மாதம் சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 152/2019 |
| Name | : Amuthavalli |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2025

**எதிரிகள் 1, 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொங்கலூர் சக்தி நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன், அ.சா.2 எனது அம்மா ஆவார். எனது அப்பா இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது அண்ணனை அடித்தார்கள். நான் வாராவாரம் பயிற்சி வகுப்பிற்கு செல்வதற்காக எனது அம்மாவிடம் குழந்தையை விட்டு செல்வேன் அப்படி விட்டுச் செல்ல வந்த போது 13.10.2018 ம் தேதி மதியம் நேரம் சரியாக தெரியவில்லை ஆலடியான் மற்றும் அவரது மனைவி நாங்கள் இருக்கும் தோட்டத்திற்கு வந்து எனது அண்ணனிடம் பேசிக்கொண்டிருந்தார்கள் நான் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தேன். சத்தமாக பேசுவதை கேட்டு வெளியே வந்தேன் காசு பிரச்சனை போல் பேசிக்கொண்டிருந்தார்கள் ஆலடியான மனைவி மாட்டை பிடித்துக்கொண்டு போகிறேன் என்று தகாத வார்த்தை பேசினார். நான் தகாத வார்த்தையால் பேச வேண்டாம் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னை குழந்தையுடன் கீழே தள்ளிவிட்டார். எனது அண்ணன் எதற்கு தள்ளி விடுகிறீர்கள் என்று கேட்டார் இரண்டாம் எதிரி பின்னே சென்ற போது டயரில் இடறி

விழுந்துவிட்டார். ஆலடியான உடனே என் மனைவியை அடித்துவிட்டாயா என்று வண்டிக்கு வைக்கும் கட்டையால் என் அண்ணனின் பின் தலையில் அடித்துவிட்டார் அடித்த உடன் மூக்கில் ரத்தம் வந்தது வலிப்பு வருவது போல் ஆகிவிட்டது. உடனே அவர்கள் இருவரும் ஓடி காரில் ஏறி சென்றுவிட்டார்கள். எனது அண்ணனை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் அங்கிருந்து கோவை அரசு மருத்துமனைக்கு அழைத்துச் சென்றோம் சுமார் 1 மாதம் சிகிச்சை எடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்